ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்

*** 55 வினு.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஓய்வு பெறும் உபாத்தியாயர்களுக்கு இப்போது கொடுக்கப்படுகிற பென்ஷன் எந்த ஆண்டு முதல் கொடுக்கப்படுகிறது ?

(இ) அதற்கு முன்னுல் ஓய்வு பெற்ற உபாத்தியாயர்களுக்கும் பென்ஷன் கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) 1—4—1955 முதல் கொடுக்கப்படுகிறது.

(இ) இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : 1955-ம் ஆண்டு முதல் ஓய்வு பெறக் கூடிய எல்லா ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படுகிறதா ? அல்லது குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கு மட்டுமா ? பஞ்சாயத்து போர்ட், தனிப்பட்ட மானேஜ்மெண்ட், கவர்ன்மெண்ட் ஸ்கூல்கள் என்றெல்லாம் இருக்கிறதே, எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசாங்கத்தில் பணியாற்றியவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

THIRU R. PONNAPPA NADAR : Sir, will the Government be pleased to grant pension to the surrendered school teachers of the erstwhile Travancore-Cochin State?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

திரு. பெ. மலேச்சாமி: உதவிப் பணம் (Pension) வாங்குகிற ஆசிரியர்கள் குறிப்பிட்ட நகரத்திற்குச் சென்று வாங்க வேண்டிய நிலையைத் தளர்த்தி அந்த ஆசிரியர்கள் குடியிருக்கின்ற ஊர்களுக்கே பண விடைத்தாள் (M.O.) மூலம் அனுப்ப அரசாங்கம் முயலுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மூலக்கேள்விக்கு இது தொடர்புடையதில்லை என்றாலும், அது கவனிக்கப்படும்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : இப்போது ஆசிரியர்களுக்கு ஓய்வுப் பணம் எவ்வளவு தரப்படுகிறது? அது போதவில்லை, அதைக் கூட்ட வேண்டுமென்று அவர்கள் சார்பாக ஏதாவது மகஜர்கள் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: எவ்வளவு பணம் கொடுக்கப்படுகிறது என்பதற்கு தனிக்கேள்வி வேண்டும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1967 ஜூன் 24]

THIRU K. VINAYAKAM: Sir, whereas teaching has been considered as the noblest of all professions even though it is the sorrowest of all trades, why should the Government make any distinction between teachers and teachers? The teachers working in the Government schools are paid pension whereas the teachers working in private or other schools are denied pension. So, will the Government consider the desirability of giving pensionary benefits to the teachers working in other institutions also?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மறுபடியும் ஆராயும் போது கவனத்தில் கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்படும்.

திரு. முனு ஆதி: 1955-ல் இருந்து இந்தச் சட்டம் அமலாக்கப் படுகிறது என்று சொன்னார்கள். மாவட்டக் கழகத்தில் வேலை செய்த ஆசிரியர்களுக்கு இதில் பலன் கிடைக்கிறதா? அவர்கள் பென்ஷன் பெறுகிறார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாவட்டக் கழகத்தில் பணியாற்றியவர்கள் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் என்று கருதப்படுவதால் அது ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: அடிப்படைச் சம்பளம் 15 ரூபாய், பஞ்சப்படி 65 ரூபாய் என்று ஆக 80 ரூபாய் என்ற விசித்திர உலகத்தில் வாழ்கிற நேரத்தில் ஆசிரியர்களுக்கு குறைந்தபட்ச பென்ஷன் 30 ரூபாயாவது கொடுக்க அரசாங்கம் கவனிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்போது 20 ரூபாய் அளவிற்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. அங்கத்தினர் அவர்களின் கருத்து ஆராயப்பட வேண்டியதொன்று.

திரு. கே. இரா. ஞானசம்பந்தன்: ஆசிரியர்களுக்கு பென்ஷன் கொடுக்கும்போது பாதிச் சம்பளமும் பஞ்சப்படியும் சேர்ந்து பென்ஷன் கொடுக்கும் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இத்திட்டத்தில் சம்பளம்தான் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுமே தவிர பஞ்சப் படி எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: 1955-க்கு முன்னதாக ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு பென்ஷன் வழங்காமல் இருக்க காரணமுண்டா? அவர்களுக்கும் பென்ஷன் வழங்க வேண்டுமென்ற மனுக்கள் வந்தி ருக்கின்றனவா? அதில் ஏதாவது உத்தரவு பிறப்பிக்கப்பட்டி ருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 1955-ம் ஆண்டுக்கு முன் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு பென்ஷன் வேண்டுமென்ற கோரிக்கைகள் பல அவ்வப்போது வந்திருக்கின்றன. அதில், 11 ஆண்டுகளுக்கு முன்னால் அவர்கள் கணக்குகள், அவர்கள் வேலை பார்த்த விவரங்கள் இவற்றைக் கண்டுபிடிக்க பல கஷ்டங்கள்

இருப்பதால் 1955-க்குப் பிறகு ஓய்வுபெற்றவர்கள் கணக்கு மட்டும் எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதற்கு முன்னால் உள்ளவர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை.

Retirement age of teachers

* 66 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal with the Government to raise the age of retirement of teachers to sixty years?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

THIRU K. VINAYAKAM: Sir, in view of the paltry remuneration which the teacher gets while working as a teacher and also in view of the high cost of living that is now prevailing in the country, will the Government think of just raising the age of retirement of teachers to 58 years—they now retire at the age of 55 and this should be increased by three-years—so as to help that community at large?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 58 வரையில் அவர்கள் ஓய்வுபெறுகிற வயதுப் உயர்த்தப்பட்டு இருக்கிறது. அரசாங்கப் பள்ளிகள், மற்றவைகளில், தனியார் பள்ளிகளில் 58-க்குப் பிறகு 60 வயது வரை வேலை கொடுக்கலாம் என்றிருக்கிறது.

திரு. வை. சுவாமிநாதன்: கலப்பு மணம் செய்துகொண்டுள்ள ஆசிரியர்களுக்கும், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஆசிரியர்களுக்கும் ஏதாவது உபகாரச் சம்பளம் கொடுக்க அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா? கலப்புத் திருமணம் அலவன்ஸ், குடும்பக் கட்டுப்பாடு அலவன்ஸ் என்று ஏதாவது அவர்களுக்குக் கொடுக்க உத்தேசமிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இப்போது இல்லை.

திரு. எஸ். ராமச்சந்திரன்: ஆசிரியர்கள் தினம் மணிக் கணக்கில் பேச வேண்டியிருப்பதால் வயதான காலத்தில் பலவித நோய்களுக்கு அவர்கள் ஆளாக வேண்டியிருப்பதை உணர்ந்து அவர்களுக்கு நன்மை செய்யும் விதத்தில் அவர்கள் சம்பள விகிதத்தை உயர்த்தி அவர்கள் ஓய்வுபெறும் வயதை 52 ஆகக் குறைக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அப்படியில்லை. ஆசிரியர்கள் ஓய்வுபெறும் வயதை உயர்த்தவேண்டுமென்று கோரிக்கைகள் பல பகுதிகளில் இருந்து வருகின்றனவே தவிர குறைக்க வேண்டுமென்று வரவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஆசிரியர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம், பஞ்சப்படி இரண்டையும் ஒன்றாகச் சேர்ப்பதற்கான உத்தேசம் உண்டா?